**செய்திவெளியீடுஎண்:225** **நாள்:23.04.2021**

# <u>செய்திவெளியீடு</u>

கோவிட்–19 தாக்கத்தைத் தொடர்ந்து, அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தில் பயின்று வந்த மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு அவர்கள் தங்கள் சொந்த ஊரிலிருந்தே படித்து தேர்வுகளை எதிர்கொள்ள பாடதிட்டங்கள் நிகழ்நிலை (Online) மூலமாக அவர்களைச் சென்றடையும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழக அரசு படிப்படியாக தளர்வுகளை மேற்கொண்டு அரசு அலுவலர்களுக்கும் குடிமைப் பணிகள் பயிற்சி மாணவர்களுக்கும் சில கட்டுப்பாடுகளுடன் நேர்முக பயிற்சிகளை நடத்த அனுமதித்த பின்னர் பயிற்சிகள் நடத்தப்பட்டன. மேலும், இப்பயிற்சிகளை வலைஒளிகளில் நடத்தும் வகையில், "AICSCC TN" மற்றும் "AIM TN" என்ற இரண்டு யுடியூப் என்கிற காட்சி ஊடகப் பாதை முறையே 03.10.2020 அன்றும் 11.02.2021 அன்றும் பயிற்சி துறைத் தலைவர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. "AICSCC TN" என்ற காட்சி ஊடகப்பாதை மூலம் அகில இந்திய குடிமைப்பணிகளுக்கான தேர்வுகளை செம்மையாக கையாளுவதற்காக பயிற்சிகளை வழங்கவும், "AIM TN" காட்சி ஊடகப்பாதை மூலம் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுவான செய்திகள் தொடர்பாக பயனுள்ள தகவல்களை வழங்கும் வகையில் இவ்வலைஒளிகள் ஆரம்பிக்கப்பட்டன. இக்காட்சி ஊடகப்பாதையில் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் தொழில் சார்ந்த வல்லுநர்கள் ஆகியோரின் உரைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு தமிழகத்திலுள்ள ஒட்டுமொத்த குடிமைப்பணி ஆர்வலர்கள் அரசு அலுவலர்கள், பொது மக்கள் போன்றோர் பயனுறும் வகையில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்நாள்வரை AICSCC TN காட்சி ஊடகப்பாதையில் 433 தலைப்புகள் பதிவேற்றும் செய்யப்பட்டு 19,300 சந்தாதரர்களைக் கொண்டும் AIM TN காட்சி ஊடகப்பாதையில் 115 தலைப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டு 3430 சந்தாதரர்களையும் கொண்டும் இயங்கி வருகின்றன. பேரிடர் மேலாண்மை, நேர மேலாண்மை, அலுவலக நடமுறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன், இணைய வழி பாதுகாப்பு வழிமுறைகள், தகவல் பெறும் உரிமைச் சட்டம், மின் ஆளுமை மற்றும் பேரிடர் மேலாண்மை போன்ற தலைப்புகளில் உரைகள் ஒலிபரப்பப்படுகிறது.

கோவிட் தொற்று–19 இரண்டாம் அலை பரவலை கருத்திற்கொண்டு தமிழக அரசு 18.04.2021 அன்று வெளியிட்ட ஆணைகளின் அடிப்படையில் அனைத்து நேர்முக அலுவலக பயிற்சிகளிலும் தற்காலிகமாக அண்ணா மேலாண்மை நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது.

அரசின் தற்போதைய பயிற்சிக்கான தடை உத்தரவிற்குப் பின்னர் 19.04.2021 அன்று அனைத்து மாணவர்களும் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பிவிட்டனர். இதனைத் தொடர்ந்து தமிழக குடிமைப்பணி ஆர்வலர்கள் பாதிப்புரா வண்ணம் மேலும் பல தலைப்புகளில், சமகால நிகழ்வுகளினால் ஏற்படும் சமூக, பொருளாதார தாக்கத்தை எதிர்கொள்ளும் நடைமுறை குறித்த பல்வேறு உரைகள், அரசு அலுவலர்களும் பொது மக்களும் பயன் பெறும் வகையில் பல்வேறு தலைப்புகளில் சிறந்த வல்லுனர்களால் இரண்டு வலைஒளிகளிலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் பதிவேற்றம் செய்யப்படும். இக்காட்சி ஊடகப்பாதையை, மாணவர்களும், அரசு அலுவலர்களும், பொது மக்களும் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இச்செயல்முறைகள் அரசு பயிற்சிக்கான தளர்வுகள் நடைமுறைப்படுத்தும் வரை, கடைப்பிடிக்கப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கூடுதல் தலைமைச் செயலாளர் /
இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம்
மற்றும்
பயிற்சி துறைத் தலைவர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**